*செய்தி வெளியீடு எண் :43* *நாள் :25.02.2020*

**தேனி மாவட்டம்**
**அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளித்திட தொழில் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன -**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-**
******

*தமிழக அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வரும் பயிற்சியாளர்களுக்கு சிறு, குறு, நடுத்தர மற்றும் பெரு தொழில் நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு அளிக்க கூடிய பயிற்சி (Internship Training) வழங்கிட உத்தரவிட்டுள்ளது.*

*இப்பயிற்சியானது ஆண்டுதோறும் 10,000 பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படவுள்ளது. இப்பயிற்சி குறித்த விவரங்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு கிண்டி தொழிற்பேட்டை, ஆலந்தூர் சாலையில் செயல்பட்டு வரும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, இயக்குநர் அலுவலகத்தினை நேரிலோ அல்லது 044-22501002, 22501006, 22500900, 22500210 மற்றும் 22500211 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.*

*இத்திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்க விருப்பம் உள்ள தொழில் நிறுவனங்கள் 29.02.2020-க்குள் விண்ணப்பிக்கலாம். எனவே, மாவட்டத்தில் உள்ள சிறு, குறு, நடுத்தர மற்றும் பெரு தொழில் நிறுவனங்கள் விண்ணப்பித்து பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.*

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**